கழகத்திலும் – அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்

# நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டவர் மிசா. இராமநாதன்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூன் 20 -

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தலைமைக்கழக தீர்மானக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மிசா இராமநாதன் அவர்கள் மறைந்த செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

அறந்தாங்கியைச் சேர்ந்த திரு. இராமநாதன் அவர்கள் பள்ளிப் பருவம் முதலே கழகப் பற்றாளராக விளங்கி, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படிக்கும் போதே மாணவர்களைத் திரட்டி மாணவர் தி.மு. கழகச் செயலாளராகப் பணியாற்றியவர் ஆவார். சென்னை சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவ்வளாகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையை நிறுவியதில் முக்கியப் பங்கு வகித்தவர் திரு. இராமநாதன் அவர்கள்.



1974ஆம் ஆண்டு ஆவுடையார்கோயில் ஒன்றியச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து 5 முறை பொறுப்பு வகித்த சிறப்புக்குரியவர். பூவலூர் ஊராட்சி மன்ற உறுப்பினராக 13 ஆண்டுகள் இருந்துள்ளார். செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் குழு உறுப்பினர் எனக் கழகத்திலும் அரசு அமைப்புகளிலும் பல்வேறு பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

நெருக்கடி நிலையை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு திருச்சி மத்தியச் சிறையில் ஓராண்டுகாலம் தண்டனை அனுபவித்து 'மிசா இராமநாதன்' எனப் பெயர் பெற்ற தீரர். இவர் சிறைக்கைதி யாக இருந்த காலத்தில் இவரது இல்லத்துக்குச் சென்று தலைவர் கலைஞர் அவர்கள் மதிய உணவு உட்கொண்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தது குறிப்பிடத்தக்க நிகழ்வு.

இத்தகைய நீண்டகாலப் பொது வாழ்வுக்குச் சொந்தக்காரரான திரு. மிசா இராமநாதன் அவர்களின் பணிகளைப் பாராட்டி கடந்த ஆண்டு சென்னை நந்தனத்தில் நடைபெற்ற கழக பவள விழா நிறைவு முப்பெரும் விழாவில் பேரறிஞர் அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்திருந்ததை இப்போது நினைவுகூர்கிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் புதுக்கோட்டை மாவட்டக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர் –

# கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவர் மிசா ராமநாதன்!

## பொதுச் செயலாளர் – நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் இரங்கல்!

சென்னை, ஜூன் 20 -

"எந்தப் பதவிக்கும் ஆசைப்படாமல், கட்சித் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர் மறைந்த மிசா ராமநாதன்" என்று அவரது மறைவுக்கு கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இரங்கல் செய்தி வருமாறு:

எனது ஆருயிர் நண்பன் மிசா ராமநாதன் அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி எனக்கு பெரும் அதிர்ச்சியையும் கட்டுக்கடங்காத துயரத்தையும் தந்தது!

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் பி.ஏ. முடித்த பின்னர், சட்டக்கல்லூரியில் எங்களுடன் பி.எல். படித்தார்.

படித்த காலம் தொட்டே கட்சியின் முழுநேர ஊழியனைப் போல் கழகத்திற்காக அயராது பாடுபட்டவர்!

எந்தப் பதவிக்கும் ஆசைப்படாதவர்!

கட்சியின் தலைமைக்கு முழுக்கக் கட்டுப்பட்டவர்!

அவரது அருமை பெருமைகளை உணர்ந்த கழகத் தலைவர் அவர்கள், கடந்த ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் அவருக்கு அறிஞர் அண்ணா விருது தந்து கவுரவித்தார்!

ராமநாதன் மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

என் நெஞ்சிருக்கிறவரையில் அந்த நண்பனின் நினைவிருக்கும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'மா' தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்டது!

# எதிர்க்கட்சிகளின் போராட்டம் தேவையற்றது!

## வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை!



சென்னை,ஜூன் 20 -

'மா' தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்ட நிலையில் எதிர் காட்சிகளின் போராட்டம் தேவையற்றது என்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

விவசாயிகளின் நலனை காக்க திராவிட மாடல் அரசு 2021 மே மாதம் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும், வேளாண்மைத் துறை என்பதை வேளாண்மை - உழவர் நலத்துறை என பெயர் மாற்றம் செய்து, எண்ணிலடங்காத திட்டங்களின் மூலம் விவசாயிகளின் நலன் காக்கப் பட்டு வருகிறது. முந்தைய அ.தி.மு.க. அரசானது, ஒன்றிய அரசின் 3 வேளாண் சட்டங்களை ஆதரித்தது போன்ற பல்வேறு உழவர் விரோத நடவடிக்கையினால் அப்போது விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தற்போது விவசாயிகள் அனைவரும் எந்தவித போராட்டமுமின்றி மகிழ்ச்சியில் உள்ள நிலையினை பொறுக்கமுடியாத ஆதங்கத்தில் "அன்றாட அறிக்கை திலகம்" எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டு மக்களை தினந்தோறும் குழப்பி வருகிறார்.

அன்றாடம் அறிக்கைப் போர் நடத்தும் எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய தினம் மா விவசாயிகளின் மீது அக்கறை உள்ளது போல் நடித்து அறிக்கை விட்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் அதிக அளவு பயிரிடப்படும் பழப்பயிரான "மா" கிருஷ்ணகிரி, திண்டுக்கல், தருமபுரி, திருவள்ளூர், தேனி போன்ற மாவட்டங்களின் பெரும்பாலான விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது. இவற்றில் பெங்களூரா, பங்கனபள்ளி, இமாம்பசந்த், நீலம், செந்தூரா, அல்போன்சா, ருமானி போன்ற இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

நடப்பாண்டில், பருவநிலை மா உற்பத்திக்கு பெரிதும் உகந்ததாக அமைந்ததால் சராசரி மகசூலான எக்டருக்கு 5 முதல் 6 மெட்ரிக் டன் என்பது எட்டு மெட்ரிக் டன்னுக்கும் மேலாக அதிகரித்து, சந்தையில் வரத்து அதிகரித்தது. இந்த நிலையில், மாம்பழக்கூழ் உற்பத்திக்கென்றே பெருமளவு பயன்படுத்தப்படும் பெங்களூரா இரக மாம்பழம் கொள்முதல் செய்யப்படாமல் தேக்கம் அடைந்த சூழல் நிலவிய தாக அறிய வந்த உடனேயே கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நியாயமான விலையில் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப் பட்டனர்.

இரண்டுகட்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகும், கொள்முதல் செய்யப்படாத நிலையில், மாநில அளவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தலைமையில், மா பதப்படுத்தும் நிறுவனங்களுடன் 16.06.2025 அன்று ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மா உற்பத்தி செய்யும் விவசாயி களின் நலன் கருதி மா பதப்படுத்தும் நிறுவனங்கள் மாம்பழக்கூழ் தயாரிக்கும் பணிகளை உடன் தொடங்கவும், மாம்பழக்கூழ் தயாரிக்க பெங்களூரா இரகத்தினை நியாயமான விலையில் உடனடியாக உழவர்களிடமிருந்து "மா" பதப்படுத்தும் நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு, மாம்பழக்கூழ் தயாரிக்கும் நிறுவனங்கள் ஆவன செய்வதாகத் தெரிவித்து மாம்பழக்கூழ் உற்பத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டு அனைத்து மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களும் பெங்களூரா இரக மாங்கனிகளை கொள்முதல் செய்து வருகின்றனர். விவசாயி களும் தங்களது மாங்கனிகளை இந்நிறுவனங்களிடம் மாம்பழக்கூழ் தயாரிக்க உரிய விலையில் அளித்து வருகின்றனர். மாங்கனிக்கான விலையும் படிப்படியாக கூடிய விரைவில் அதிகரிக்கும். மாங்கனிகள் கொள்முதல் ஆகஸ்டு மாதம் இரண்டாம் வாரம் வரை நடைபெறும். எனவே, "மா" விவசாயி களுக்கு லாபம் கிடைத்திட இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

"மா" தொடர்பான பிரச்சினை முடிவுக்கு வந்து விட்ட நிலையில், இப்பிரச்சினையைப் பெரிதாக்கி அரசியல் செய்ய முயற்சித்த எதிர்க்கட்சிகள், அரசின் முயற்சியால் விவசாயிகள் "மா" விற்பனை செய்வதைப் பொறுக்க முடியாமல் போராட்டம் நடத்துவதாகக் கிளம்பியுள்ளது தேவையற்ற ஒன்று. எனவே, தமிழ்நாட்டு மக்களின் கவனச்சி தறல்கள் ஏதுமில்லாமல் திராவிட மாடல் அரசுக்கு நாள்தோறும் விவசாயி களின் ஆதரவு பெருகி வருவது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி, அருள்ஜோதி நகரில் சிறப்பு நிதி 179.20 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 10ல் அருள்ஜோதி நகர் குறுக்கு வீதிகள் மற்றும் குறிஞ்சி நகர் குறுக்கு வீதிகளில் பழுதுபட்ட தார்ச்சாலைகளை பலப்படுத்தும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மூலனூர் பேரூர் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி, ஒன்றிய செயலாளர்கள் துரை தமிழரசு, ப.பழனிசாமி உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் மு. கேசவன்
### ஜூன் 20 (2019)



கழகம் துவங்கிய காலத்திலேயே, கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பொன்னேரி வட்டத்தில் கழகத்தை துவங்கியவர்.

பொன்னேரி வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற மும்முனைப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | திருத்தணி வடக்கு ஒன்றியம் | என்.என்.கண்டிகை | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி<br>கா.ராஜராஜேஸ்வரி |
| 2 | 22.06.2025 | பூண்டி மேற்கு ஒன்றியம் | பூண்டி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| 3 | 23.06.2025 | இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம் | தாமனேரி | குடியாத்தம் புவியரசி<br>மா.பூபதி |
| 4 | 24.06.2025 | பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | வெளியகரம் | நெல்லிகுப்பம் புகழேந்தி |
| 5 | | பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | கர்லம்பாக்கம் | க.ரா.சந்தியா |
| 6 | | பொதட்டூர்பேட்டை பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | தருமபுரி அதியமான் |
| 7 | 26.06.2025 | இரா.கி.பேட்டை தெற்கு ஒன்றியம் | சாணூர் மல்லாவரம் | காவேரிப்பட்டணம் இளையராஜா |
| 8 | 27.06.2025 | பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | நொச்சிலி | சேலம் சுஜாதா |
| 9 | 28.06.2025 | திருத்தணி கிழக்கு ஒன்றியம் | வேலஞ்சேரி | சேலம் சுஜாதா<br>விக்னேஷ் உதயன் |
| 10 | 29.06.2025 | இரா.கி.பேட்டை கிழக்கு ஒன்றியம் | வங்கனூர் | ஸ்ரீராம் |
| 11 | | பள்ளிப்பட்டு பேரூர் | சந்தைப்பேட்டை | க.ஷேவிதா |
| 12 | 30.06.2025 | திருத்தணி மேற்கு ஒன்றியம் | புச்சிரெட்டிப்பள்ளி | ஆரணி மாலா |
| 13 | | திருத்தணி தெற்கு ஒன்றியம் | எஸ்.அக்ராஹரம் | அப்துல்ரகுமான் பாரி |
| 14 | 01.07.2025 | இரா.கி.பேட்டை வடக்கு ஒன்றியம் | பாலாபுரம் | தமிழ்சாதிக் |
| 15 | 02.07.2025 | கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | பேரம்பாக்கம் | எழும்பூர் கோபி<br>ஜெ.பாலசந்தர் |
| 16 | | திருவள்ளூர் நகரம் | மீரா திரையரங்கம் அருகில் | தமிழ்சாதிக் |
| 17 | 03.07.2025 | திருத்தணி நகரம் | நேரு நகர் | முரசொலி மூர்த்தி |
| 18 | 04.07.2025 | திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | சீதாபுரம் | வரகூர் காமராஜ்<br>மா.பூபதி |
| 19 | 05.07.2025 | கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | விடையூர் | வண்ணை புகாரி<br>ஐஸ்வர்யா |
| 20 | 06.07.2025 | திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் | ராமலிங்கபுரம் | பழ.ராஜேந்திர பிரசாத் |

திருவள்ளூர்
நாள் : 18-06-2025

